செய்தி வெளியீடு எண். 46 நாள்: 23.01.2018

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்ட மையங்களில் காலியாக உள்ள சத்துணவு சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு ஏற்கனவே விண்ணப்பம் செய்தவர்களுக்கு நேர்காணல் 27.01.2018 அன்று நடைபெற உள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., தகவல்**

திருவள்ளூர் மாவட்டம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்ட மையங்களில் காலியாக உள்ள சத்துணவு சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு ஏற்கனவே விண்ணப்பம் செய்தவர்களுக்கு ஒன்றியங்கள் வாரியாக நேர்காணல் 27.01.2018 அன்று கலவல கன்னன் செட்டி இந்து மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஆவடி ரோடு, காக்களூர் ஏரிக்கு எதிர்புறம் காக்களூர், திருவள்ளூர் என்ற இடத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையில் ஊராட்சி ஒன்றியம் வாரியாக நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சத்துணவு சமையல் உதவியாளர் பணிக்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு நேர்காணலுக்கு தனித்தனியே அழைப்பாணை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நேர்காணல் நடைபெறும் தேதியில் நேர்காணலுக்கு வராதவர்கள் தகுதியற்றவராக கருதப்படுவார்கள், அவர்களுக்கு மீண்டும் நேர்காணலுக்கான வாய்ப்பு கிடையாது. நேர்காணலுக்கு அழைக்கப்பட்ட நபர்கள் அனைத்து அசல் சான்றுகளையும் நேர்காணலின் போது சமர்ப்பிக்க வேண்டும். அழைப்பாணை மற்றும் ஒப்புகை சீட்டையும் தவறாமல் கொண்டுவர வேண்டும். விண்ணப்பம் செய்து அழைப்பாணை கிடைக்கப்பெறாதவர்கள் விண்ணப்பம் செய்தமைக்கான ஒப்புகை சீட்டுடன் நேர்காணல் நடைபெறும் மேற்காணும் பள்ளிக்கு வந்து உதவி மையத்தை அணுகவும்.

மேலும், நேர்காணலுக்கு வருவோர் தங்களுக்கு தேவைப்படும் குடிநீர், உணவு ஆகியவற்றைக் கொண்டுவரவும் (மகளிர் சுய உதவிக்குழு மூலம் உணவு பொட்டலங்கள் விற்பனைக்கு கிடைக்கும் தேவைப்படின் பயன்படுத்திக் கொள்ளவும்). மேலும், உதவிக்கு : 1077/ 044-27665421 / 044-27600273 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**